# OA : 140 of 2021

## "The Chennai Metropolitan Water Supply and Sewerage Board ignores mix of Sewage water carried in Lorry in Buckingham Canal"



www.dinamalar.com | சென்னை | • செவ்வாய் • ஜனவரி 25 2022

# பகிங்ஹாம் கால்வாயில் கழிவுநீர் கலப்பு

## நடவடிக்கை எடுக்காமல் அதிகாரிகள் மவுனம்

**சோழிங்கநல்லூர், ஜன. 25–**

பகிங்ஹாம், ஒக்கியம் மடு கால்வாய்களில் கழிவுநீர் கலப்பது குறித்து தகவல் அறிந்தும், லாரி உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அதிகாரிகள் மவுனம் சாதித்து வருகின்றனர்.

சோழிங்கநல்லூர் மண்டலத்தில் ஒன்பது வார்டுகள் உள்ளன. இங்கு, கழிவுநீர் இணைப்பு வசதி செயல்பாட்டுக்கு வரவில்லை. இதனால், வீடுகளில் சேகரமாகும் கழிவுநீர், அங்கீகரித்த லாரிகள் வாயிலாக பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்து செல்லப்படும்.

ஒரு லாரி கழிவுநீர் வெளியேற்ற, வீட்டு உரிமையாளர்களிடம் 750 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. சுத்திகரிப்பு நிலையத்திற்கு, லாரி உரிமையாளர், 150 ரூபாய் செலுத்த வேண்டும்.

வீடுகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், வடிகால், கால்வாய், ஏரி, குளங்களில் கொட்டக் கூடாது; லாரியில் இருந்து கழிவுநீர் கசியவும் கூடாது.

அதேபோல், 'பீக் ஹவர்ஸ்' நேரத்தில், குறிப்பிட்ட சாலையில் லாரி இயக்கக்கூடாது என்பது உள்ளிட்ட, பல்வேறு நிப்ந்தனைகள் விதித்து, லாரி ஒப்பந்தம் வழங்கப்பட்டு உள்ளது.

ஆனால், ஆறு மாதமாக பல லாரி உரிமையாளர்கள், வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து கழிவுநீரை ஏற்றி, ஒக்கியம்மடு, பகிங்ஹாம் கால்வாய், ஏரி, குளங்களில் கொட்டுகின்றனர்.

இதனால், நீர்நிலைகள் மற்றும் சுற்றுவட்டார பகுதி ஆழ்துளை கிணறுகளில் நிலத்தடி நீர் மாசடைகிறது. ஆறு மாதமாக, துரைப்பாக்கம், சோழிங்கநல்லூர், நீலாங்கரை, செம்மஞ்சேரி பகுதிமக்கள், குடிநீர் வாரிய அதிகாரிகளிடம் புகார் அளித்துள்ளனர்.

இருந்தும், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அதிகாரிகள் மவுனம் சாதிக்கின்றனர் என, அவர்கள் குற்றம் சாட்டினர்.

இது குறித்து, நீர்நிலை ஆர்வலர்கள் கூறியதாவது:

சென்னையின், தெற்கு, மேற்கு திசைகளில் உள்ள நீர்நிலைகளில் இருந்து வடியும் மழைநீர், சதுப்பு நிலம், ஒக்கியம்மடு, பகிங்ஹாம் கால்வாய் வழியாக கடலில் சேர்கிறது.

மழை நின்றாலும், நீர் ஊற்றால் கால்வாயில் வெள்ளம் சென்றபடி இருக்கும். இதில், கழிவுநீர் கலக்கும் போது, நீர் மாசடைகிறது.

லாரி கழிவுநீரை, நீர்நிலைகளில் கொட்டுவதைதடுக்க, விரிவாக்க மண்டலங்களில், வார்டு வாரியாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

அவர்கள், நடவடிக்கை எடுக்காததால், சோழிங்கநல்லூர் மண்டலம் குடிநீர் வாரிய பகுதி பொறியாளரிடம், ஆறு மாதமாக புகார் அளித்துள்ளோம்.

லாரி உரிமையாளர்களுக்கு ஆதரவாக தான், அவர்கள் செயல்பட்டு வருகின்றனர். உயர் அதிகாரிகள் தலையிட்டு, நீர்நிலைகளில் லாரி கழிவுநீர் கொட்டுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

■ ஒக்கியம்மடு கால்வாயில் லாரி வாயிலாக கொட்டப்படும் கழிவுநீர். இடம்: காரப்பாக்கம், ஓ.எம்.ஆர்.,

**News Item in Dinamalar newspaper, Chennai Edition dated 25th January 2022**

**Sholinganallur:** Sewage water carried in Lorry is mixed in Buckingham Canal has become a continuous story. It is disappointing that the Chennai Metropolitan Water Supply and Sewerage Board who is supposed to prevent sewage mix is ignoring. Sozhinganallur Zone consists of Thuraipakkam, Kannakinagar, Sozhinganallur, Semmancheri, Neelangarai, Injambakkam, and Paniyur. It has Nine Wards. Since it is an extension area, facility of sewage connections are not yet implemented. Therefore, Lorries are being used to clean and transport sewages waters. The sewages are supposed to be transported to Perungudi Sewage Treatment Plant The Chennai Metropolitan Water Supply and Sewerage Board have been directed to take action on Lorries and to stop mix of sewage water in the water bodies.